2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் தட்டுப்பாடு குறித்தும், வறட்சி நிலவரம் குறித்தும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து இன்னும் அறிக்கை பெறப்படவில்லை. அறிக்கை பெறப்பட்டவுடன் ஒவ்வொன்றாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட தங்களிடத்திலே ஒரு விண்ணப்பம் வைத்தேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசங்கர் அவர்களைப்பற்றி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) அமருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, பேசுங்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அன்புவிலாஸ் இறக்கத்தில் இரண்டு வீடுகளுக்கிடையிலே குடியிருப்புப் பகுதியில் இருக்கக்கூடிய டாஸ்மாக் கடை சம்பந்தமாக. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் பெறப்பட்டவுடன் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடு) பதில் பெறப்பட்டவுடன் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

(ஆ) வால்பாறை பகுதியில் தொடர் மழையால் ஏற்பட்ட பாதிப்பு

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதியில் கடுமையான மழை பொழிகிறது. மழையின் காரணமாக அங்கே இருக்கக்கூடிய. . .*

2014 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுதுதானே நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) சொல்கிறீர்களா? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதியில் கடுமையான மழை தொடர்ந்து பெய்துகொண்டிருக்கிறது. சிறுவர் பூங்கா பகுதியிலும் அதேபோல (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: சிறுவர் பூங்கா பகுதியிலும், சிலோன் காலனியிலும், அதேபோல அங்கே இன்னும் இருக்கக்கூடிய மற்ற பகுதிகளிலும் கடுமையான மழையினால் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. சிறுவர் பூங்கா பகுதியில் இருக்கக்கூடிய 48 வீடுகளில், 28 வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துவிட்டது. நிலச் சரிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிவாரண நடவடிக்கைகளின் வேகம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அந்த மக்கள் அச்சத்தோடு இருக்கிறார்கள். வால்பாறை பகுதியில் தொடர்ந்து மழை பெய்துவருகின்ற காரணத்தினால் அங்கிருக்கக்கூடிய பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே தொடர்ந்து மழை பெய்துகொண்டிருக்கின்ற காரணத்தினால் மழை நீர் வீடுகளுக்குள் புகாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வறட்சி என்றும், குடிநீர் பஞ்சம் என்றும் சொல்கிறார். ஆனால், வால்பாறை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் விடாது மழை பெய்துகொண்டிருக்கிறது என்று சொல்கிறார். திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இங்கே தண்ணீரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்கிறார்.

[திருமதி பா. வளர்மதி] [2014 ஜூலை 15

எது உண்மையான நிலவரம் என்பதை திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்தான் இந்த அவைக்கு விளக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் பதில் சொல்கிறார். பேசாமல் இருங்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியிலே 11-7-2014 முதல் தொடர்ந்து மழை பெய்து வருவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இம்மாமன்றத்தில் தெரிவித்தார்கள். பொதுவாக அந்தப் பகுதியில் winter season-ல் 49.3 மி.மீ. மழையும், கோடைக் காலங்களில் 17 மில்லி மீட்டர் அளவும், சாதாரண காலங்களில் 123 மில்லி மீட்டர் அளவும் மழை பொழிகின்றது. தற்போது 154 மில்லி மீட்டர் அளவு மழை பொழிந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-15

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மழையின் அளவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் அங்கே நிலச் சரிவோ, சாலைகளில் சேதம் போன்ற எந்தவிதமான பாதிப்போ இதுவரை ஏற்படவில்லை. இருந்தபோதிலும், மழையின் அளவை உன்னிப்பாகக் கவனித்து, தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவிட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது